**அ.வ.எண். 167/2023**
**வா.சா.2 : விஜயலட்சுமி**
**தேதி : 24.02.2026**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**3 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

தாவா சொத்துக்கள் உங்கள் மாமனார் தியாகராஜனுக்கு வா.சா.ஆ.7 ஆவணத்தின் படி தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் தாவா சொத்தில் மேற்கு பார்த்த 2 வீடுகளில் உங்கள் மாமனாரின் அனுமதியுடன் தான் அந்த வீடுகளில் குடியிருந்து வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 11.11.2020 ஆம் தேதி உங்கள் மாமனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் உங்கள் மாமியாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 11.11.2020 ஆம் தேதி உங்கள் மாமனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் மகள் சுமதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 11.11.2020 ஆம் தேதி உங்கள் மாமனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் மற்றொரு மகள் சுபாவிற்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. 11.11.2020 ஆம் தேதி உங்கள் மாமனாரின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் உங்கள் கணவரின் சகோதரர் சரவணனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் மாமியார், சுமதி, சுபா ஆகிய மூவரும் சேர்ந்து கடந்த 18.11.2020 ஆம் தேதியன்று அவரவருக்கு பாத்தியப்பட்ட செட்டில்மெண்ட் சொத்துக்களை 3 ஆம் பிரதிவாதி சரவணனுக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. சுமதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையிலும், சுமதியின் அனுமதியுடன் தான் தாவா சொத்தில் நீங்கள் மேற்கு பார்த்து 2 வீடுகளில் குடியிருந்து வந்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு தாவா சொத்து 3ம் பிரதிவாதி சரவணனுக்கு பாத்தியப்பட்டதால் நீங்கள், உங்கள் கணவர் குடியிருக்கும் 2

வீட்டை காலிசெய்வதற்கு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு கொடுத்துள்ளரா என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த பின்னர் தான் உங்கள் கணவர் இந்த வழக்கை வேண்டுமென்றே தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதியான உங்கள் கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவரின் பங்கை மோசடியாகவும், ஏமாற்றவும் வேண்டி பிரதிவாதிகள் ஆவணங்களை தயார் செய்துள்ளார்கள் என்று வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தின் முன்பகுதியை 3ம் பிரதிவாதி சரவணன் உரிமையாளர் என்ற முறையில் தாவா சொத்தின் முன்பகுதியை இடித்து கடையாக கட்டி வாடகைக்கு விட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. உங்கள்கணவருக்கு 4ல் 1 பங்கு சொத்து பாகம் உள்ளதாக தவறாக கூறிகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.02.24 18:32:11 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.